முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் யோகச்சித்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

05.06.2019, புதன்கிழமை

1. **காக்கும் சக்தியாக வந்த ஞானியே**
**கருணை வடிவாக அருளும் தவசியே**
**தேக்கமின்றி உன் கொள்கைகள்**
**தேசமெங்கும் பரவி வருதல் காண**

2. காணவே இந்த கலியுகமே
கட்டாயம் ஞானயுகம் ஆகும் எனக் கூறி
ஞானதேசிகனுன் பெருமை கூறி
ஞாலமதில் நித்ய பிரசன்ன ஆசி

3. ஆசியை **விகாரி விடை திங்கள்**
**அறிவிக்க இருபானீர் திகதி புந்தி வாரம்**
**(விகாரி வருடம் வைகாசி மாதம் 22ம் நாள் 05.06.2019, புதன்கிழமை)**
**ஆசிபட யோகச்சித்தர் யானும்**
அருளுவேன் உலகோர் நலம்பெற

4. நலம் தரும் ஞானிகள் துணையை
ஞாலமதில் சித்தர்கள் வழிபாடாக
பலம்பெற மக்கள் செய்து கொண்டு
பாடிடவே அன்னதான நெறியை

5. நெறியை ஏற்றுத் தொடரவே
நிலவுலகில் தருமபலமும் கூடி
வறுமை கஷ்டம் என்பதில்லா
வளமான வாழ்வை உலகோர் அடைவர்

6. அடையவே துறையூர் எல்லை
ஆன்மீக ஞானசபை கண்டு
தடையற வருகை தொடர்ந்து
தருமத்தில் பங்களிப்பு செய்து

7. செய்துமே அரங்க ஞானி பேரில்
சேவையாக உலகம் எங்கும்
மெய்ஞானமுற அன்னதானம் வளர
மேலான தொண்டு ஆற்றி வர

8. வருகவே தருமத்தின் வழியாக
வடிவேலன் அருளும் தயவும்
பெருமளவாய் வருகை புரிந்து
பேருலகோர் சர்வபலம் பெறுவர்

9. பெருமைமிக்க ஆசான் அரங்கன்
பேரருளை பெற்று உலகோர் உயர
தருமமுடன் அரங்கனை நோக்கி
தரணியோர் அணுகி ஆசி தீட்சை பெற

10. தீட்சை பலமுடன் தொண்டர்களாகி
தொடர்ந்து ஞானிகள் பூசை கலந்து
தீட்சைபடி செபதபம் செய்து கொண்டு
தேசிகனார் வழியை தொடர

11. தொடரவே கலியுகம் தானும்
தெய்வீக நிலை கண்டு சிறக்கும்
இடர்கள் என்பதே இல்லா ஏற்றம் காணும்
இயம்பி வந்த நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் யோகச்சித்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

இவ்வுலகைக் காக்கின்ற மகா சக்தியாக அவதாரமாக வந்துதித்திட்ட மகா ஞானியே கருணையே வடிவாக வந்தருளும் மகா தவசியே தடையின்றி உமது தூய நெறிக் கொள்கைகள் நாடெங்கும் பரவிட இந்த கலியுகமே உறுதியாக ஞானயுகமாக மாறிடும் எனக் கூறியே உலக நலம் கருதி விகாரி வருடம் வைகாசி மாதம் **22**ம் நாள் **05.06.2019**, புதன்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே யோகச்சித்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் யோகச்சித்தர்.

எல்லா நலங்களையும் தந்தருளும் மகா ஞானிகளின் அருள் துணையினை சித்தர்கள் வழிபாடுகளைச் செய்து பெறுவதுடன் தருமபலம் பெற, அவரவரும் அன்னதான நெறியினை பின்பற்றி அன்னதானத்தினை அதிகமாகச் செய்வதுடன் தினம்தினம் மறவாமல் முருகப்பெருமானை வணங்கி வருதல் வேண்டும்.

இவ்விதமே மக்களெல்லாம் செய்து வர, நாட்டினில் வறுமை கஷ்டம் என்பது இல்லாமல் ஆகி வளம்மிக்க வாழ்வினை உலக மக்களெல்லாம் அடைந்து சிறப்படைவார்கள். ஞானபூமியாம் துறையூர் நகருக்கு சென்று ஆங்கே உலகம் நலம்பெற சர்வ வல்லமையுடன் முருகப்பெருமானால் அமைக்கப்பட்டுள்ள ஏழாம் படை வீடாம் ஞானசபை துறையூர் ஓங்காரக்குடிலினை நாடி பயபக்தியுடன் அணுகி ஆங்கே நடக்கின்ற தர்மபணிகளிலே அன்னதானத்திலே பங்களிப்பாக தொண்டுகள் செய்தும் பொருளுதவிகள் செய்தும் வருவதோடு உலகமெங்கும் உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் புகழினை பரப்பி வருதல் வேண்டும்.

உலகமெங்கும் மெய்ஞானம் வளம் பெறவும், அன்னதானம் வளரவும் மேன்மையுடன் தொண்டுகளைச் செய்து வர வேண்டும். உலகினில் பரவுகின்ற மெய்ஞானத்தினாலும் தர்மத்தினாலும் முருகப்பெருமானின் அருளும் தயவும் உலகினில் பெருமளவில் பெருகி மக்களெல்லாம் முருகப்பெருமானின் அருளையும் தயவையும் பெற்று சர்வபலத்தினை பெற்று சிறப்படைவார்கள்.

பெருமைமிக்க உலகப் பேராசான் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் பேரருளைப் பெற்று உயர்வான நிலையை அடைய வேண்டுமாயின் அவரவரும் தருமங்களை தாராளமாய் செய்வதுடன் அரங்கமகா தேசிகனாரை பயபக்தியுடன் பணிந்து வணங்கி அரங்கரிடத்து தீட்சை உபதேசம்தனை அடைந்து அரங்கரின் திருவடிக்கே தொண்டர்களாக ஆகி தினம்தினம் மறவாமல் ஞானிகள் திருவடிகளை மனம் உருகி பூஜைகள் செய்வதுடன் அரங்கர் கூறிய உபதேச வழிகளில் தூயநெறியில் நின்று அரங்கமகா தேசிகனாரைப் பின்தொடர்ந்து வர, இந்த கலியுகமே தெய்வீக நிலையை அடைந்து ஞானயுகமாக மாறி சிறப்படையும், இடர்களும் இன்னல்களும் இல்லாத வகையில் முன்னேற்றங்களை அடைந்து மகிழ்வுமிக்க ஞானயுகமாக மாற்றம் அடையும் எனக் கூறுகிறார் மகான் யோகச்சித்தர்.

–சுபம்–